12

# Southern Tamil Nadu Through the Ages

Editors
K.A. Manikumar
Vinod Vincent Rajesh

| | | |
|---|---|---|
| Title | : | Southern Tamil Nadu Through The Ages |
| Subject | : | Essays |
| Edition | : | May 2011 |
| Pages | : | 196 |
| Rate | : | Rs.150 |
| Size | : | Royal |
| Paper | : | 18.6 GSM |
| Book making | : | Chuvadi, Chennai -5<br>Phone: 044-28441672 |
| Print | : | Mani Offset, Chennai-5 |
| Publication | : | Department of History<br>Manonmaniam Sundaranar University<br>Tirunelveli |

# தென்னிந்திய-இலங்கை அரசியல் உறவுகள் [சோழர் காலம்வரை]

கந்தையா அருந்தவராஜா

## அறிமுகம்

வரலாற்று ஆதாரங்களின்படி தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள் இரண்டு நாடுகளுக்குமிடையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே (Pre Historical Period) இருந்து வந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது. அந்தவகையில்; தென்னிந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் மேலோங்கியிருந்த காலம் சோழர் காலமே. சோழ அரசு, பேரரசாக உருவாக்கம் பெற்றபோது இலங்கை மன்னர்கள் சோழமன்னர்களுக்கு எதிராகச் சேரருடனும் பாண்டியருடனும் நல்லுறவினை வைத்துக்கொண்டார்கள். இதனை விடச் சோழர்களின் வர்த்தக விஸ்தரிப்பு நடவடிக்கைகள் இலங்கையைத் தமது மண்டலமாகப் பின்னாளில் மாற்றிக்கொள்ள அவர்களுக்கு உதவியது. தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற அரசவம்சங்களுக்கும் இலங்கை அரசர்களுக்குமிடையில் இத்தகைய உறவு ஐரோப்பியர்கள் காலம்வரை தொடர்ந்து வந்தமை பொதுவாகக் குறிப்பிடப்பட வேண்டியதொரு விடயமாகும். இவ்வுறவுகளின் ஊடாக ஒன்றின்மேல் மற்றதன் செல்வாக்கு என்றுமே கணிசமான அளவு இருந்துவந்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இத்தகையதொரு பின்னணியில் பின்னாளில்

ஆங்கிலேயர்களின் காலத்தில் மேலும் இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்பு உண்டானது.

**அமைவிடம்**

இத்தகைய நீண்டகாலப் பாரம்பரியங்கொண்ட இரண்டு நாடுகளின் உறவுகளுக்கும் இரண்டு நாடுகளும் அமைந்துள்ள அமைவிடமே முக்கியக் காரணியாக விளங்கியது. தொல்லியல் மற்றும் மண்படையியல் (Geology) ஆதாரங்களிலிருந்து இலங்கை தென்னிந்தியத் தீபகற்பத்தின் ஒரு பகுதியாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தமையினை அறிந்து கொள்ள முடிகின்றது[1]. ஆனால் இலங்கை தென்னிந்தியாவிலிருந்து எப்போது பிரிந்ததென்பது சரியாக இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த உறவு என்பதில் அது தமிழ்நாட்டுடன் கொண்டிருந்த தொடர்பு மிகவும் நெருக்கமானதாகக் காணப்பட்டது இதற்கு முக்கியக் காரணம் தென்னிந்தியாவின் ஒருபாகமான இப்பகுதி இலங்கைக்கு மிகவும் அண்மையில் அமைந்திருந்தமையாகும். இத்தகைய உறவுகள் இரண்டு நாடுகளுக்கிடையிலும் அரசியல் பொருளாதாரச் சமூகப் பண்பாட்டு அடிப்படையில் அமைந்திருந்தன எனலாம். அந்தவகையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஆரம்பித்த இத்தகைய தொடர்புகள் சங்க காலம், பல்லவர் காலம், சோழப் பேரரசகாலம், பாண்டியர் காலம் மற்றும் விஜயநகர நாயக்கர்கள் ஆட்சிக்காலங்களிலும் தொடர்ந்தது.

**ஆதாரங்கள்**

தென்னிந்தியாவுடன் இலங்கை கொண்ட தொடர்பினை நோக்குகின்ற போது இத்தொடர்புகள் பற்றித் தொல்லியல் மானிடவியல் துறைகள் வளர்ச்சியடையாததொரு காலகட்டத்தில் மகாவம்சம் (Mahavamsa)[2], தீபவம்சம் (Dipavamsa)[3] போன்ற இலங்கையின் வரலாற்றினைக் கூறுகின்ற பாலி நூல்களை மட்டுமே மையமாகக் கொண்டு இலங்கை தொடர்பான வரலாறு எழுதப்பட்டது. இந்நூல்கள் இலங்கை வடஇந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவத்தினை தென்னிந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த தொடர்புகளுக்கு வழங்கவில்லையென்றே கூற வேண்டும். ஆனால் பிற்பட்ட காலங்களில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி முடிவுகள் பல இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையிலே பண்டைய காலம் தொட்டே இருந்து வந்த உறவுகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தான் (Megalithic culture) அரச தோற்றம் (State formation), நகருருவாக்கம் (Emergence of Cities) என்பன ஏற்பட்டன. இதேபோன்று இவையிரண்டும் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். இதற்குத் தென்னிந்தியாவில் ஏற்பட்ட அரச தோற்றம் பற்றிய கருத்துகள் உதவியிருந்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற பல

குறிப்புகள் இலங்கையின் பிரதான வரலாற்று மூலங்களாகக் கருதப்படுகின்ற பாலி இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. குறிப்பாக சேர, சோழ, பாண்டிய அரசுகள் பற்றிய குறிப்புகள் பாலி இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. இலங்கையில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களிலும் இவை பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. இத்தரவுகள் இரு நாடுகளுக்கிடையிலும் நீண்டகாலமாகயிருந்த உறவினை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் இரண்டு நாடுகளுக்கிடையிலும் இக்காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த அரசியல் உறவினைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்லியல் சான்றுகள் போன்ற ஆதாரங்கள் பயன்படுகின்றன. இவை ஏராளமாக இலங்கையிலும் தென்னிந்தியா விலும் கிடைத்துள்ளன. இத்தகைய ஆதாரங்கள் பல இருநாடுகளிலும் கிடைத்தாலும், கி.பி. 7ஆம் நூற்றாண்டுவரை இரண்டு நாடுகளுக்குமிடை யிலே இருந்துவந்த வரலாற்றினை அறிவதற்குத் தேவையான தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் தென்னிந்திய வரலாற்று மூலங்களில் அதிகம் கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும். எனினும் இக்காலப் பகுதிக்குரிய இரண்டு நாடுகளுக்குமிடையிலான வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இலங்கையில் கிடைத்துள்ள இலக்கிய ஆதாரங்கள் ஓரளவுக்கு உதவுகின்றன என்றே கூறவேண்டும்.

பல்லவவம்சம் தென்னிந்தியாவில் எழுச்சியடைந்தமையினைத் தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் தாக்கங்கள் பெருமளவுக்கு இலங்கையினையும் பாதித்ததன் விளைவாக இக்காலப் பகுதியிலிருந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பான சான்றுகள் தெளிவாகக் கிடைத்துள்ளன. அந்தவகையில் பல்லவர் காலத்திலிருந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான அரசியல் வரலாற்றினைத் தொடர்ச்சியாக அதேநேரம் ஓரளவு தெளிவாகவும் அறிந்துகொள்ள முடிகின்றதெனலாம். பொதுவாக இரண்டு நாடுகளுக் கிடையிலும் தொடர்புகள் ஏற்பட்டமைக்கு வர்த்தகமே முதற்காரணமாக அமைந்தது. தென்னிந்தியாவுடன் இலங்கை கொண்ட உறவு தொடர்ந்து ஏனைய உறவுகளுக்குக் காரணமாக அமைந்தமை அவதானிக்கத்தக்கது.

**முதலாவது அரசியல் தொடர்பு**

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான அரசியல் தொடர்பானது படையெடுப்புக்கள், குடியேற்றங்கள், திருமண உறவுகள் மற்றும் கைதிகளைப் பிடித்துச் செல்லுதல் போன்ற வழிகளில் உண்டாயின எனக் கூறப்படுகிறது. ஆயினும் இலங்கை – இந்திய முதலாவது அரசியல் தொடர்பு ஏற்படுவதற்கு விஜயன் வருகையே காரணமாக அமைந்தது. விஜயனும் அவனுடைய நண்பர்கள் 700 பேரும் இந்தியாவின் வடமேற்குக் கரையிலுள்ள லாடதேசத்திலிருந்து இலங்கையின் வடமேற்குக் கடற்கரைப் பகுதியான தம்பன்னியில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் வந்து இறங்கியதாகப் பரம்பரைக்கதைகள் கூறுகின்றன. இவர்களையே சிங்கள இனத்தின்

ஸ்தாபகர்களாகப் பாலி இலக்கியங்கள் சித்தரிக்கின்றன[4]. விஜயன் தன்னுடைய முடிசூட்டு விழாவின் பொருட்டுப் பாண்டிய மன்னனிடம் பெண் கேட்டதாகவும் கூறப்படுகிறது.[5]

விஜயனின் தந்தை சிங்கபாகு எனவும், அவனது தந்தை ஒரு சிங்கமென வும், விஜயனும் அவனது குழுவினரும் இலங்கைவந்த சமயத்தில் இயக்கர் நாகர் இலங்கையில் வாழ்ந்ததாகவும், பாலி இலக்கியங்கள் கூறுகின்றன[6]. விஜயன் தான் வந்து இறங்கிய இலங்கைத் துறைமுகத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஏற்கனவே பாண்டி நாட்டுமன்னன் தொடர்பு இருந்ததன் காரணத்தினாலேதான் பாண்டிய அரசுடன் அவன் திருமணத் தொடர்பினை ஏற்படுத்தியிருக்க முடியும். மேலும் இவன் 18 பிரிவினரைக் கொண்ட 1000 தமிழ்க் குடும்பங்களையும் வரவழைத்துத் தம்பன்னியைத் தலைநகரமாகக் கொண்டு 38 வருடங்கள் ஆட்சி புரிந்துள்ளான்[7]. விஜயனுக்குப் பின்பாகப் பாண்டியப் பட்டத்தரசிக்கும் விஜயனுக்கும் பிறந்த மகனான பண்டுவமிசத்தவனே அரசாட்சியை ஏற்றுக்கொண்டான் என மரபுகள் சில கூறினாலும், சிலர் இவனை விஜயன் சகோதரன் மகன் எனவும் கூறி இவன் இந்தியாவிலிருந்து இலங்கையின் கோகர்ணத் துறையில் மாறு வேடத்தில் வந்து இறங்கியதாகவும் கூறுகின்றனர்[8].

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால வரலாற்றுக் கதையான விஜயன் கதையில் பல்வேறு சந்தேகங்கள் காணப்பட்டாலும், இதில் கவனிக்க வேண்டியதொரு விடயம் யாதெனில் இக்கதையில் இலங்கை தென்னிந்தியாவுடன் தொடர்புப்பட்டிருப்பதே. மேலும் மகாவம்சம் பாரம்பரியமான இலங்கை தென்னிந்திய உறவினை ஏற்றுக்கொண்டமை யும் அவதானிக்கத்தக்கது.

**கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதி**

கி.மு. 3ஆம் நூற்றாண்டு இந்திய– இலங்கை உறவில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாகும். அரசியல்ரீதியில் மட்டுமின்றி, இக்காலம் பண்பாட்டுரீதியிலும் சிறப்புப் பெறுகின்றது. தேவநம்பிய திஸ்ஸ ஆட்சிக் காலத்தில் (கி.மு. 250–10) மௌரியப் பேரரசன் அசோகன் இலங்கையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தான்[9]. இத்தொடர்பானது பௌத்த சமயம் தொடர்பானது எனக் கருதப்பட்டாலும், இவ்வுறவு வெறுமனே பண்பாட்டுரீதியான தொடர்பாக மட்டும் இருந்திருக்க முடியாது. பேரரசின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள விரும்பிய இலங்கை வேந்தன் அதற்கான வழி முறைகளிலொன்றாகப் பௌத்தமதத்தினை ஆதரித்திருக்கலாம்.

தேவநம்பியதிஸ்ஸனுக்குப் பின்னர் அவனது சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக அனுராதபுரத்தினை ஆட்சிசெய்து வந்தனர். இவர்கள் தேவநம்பிய திஸ்ஸவைப் போன்று பலமானவர்களாகவோ இராஜதந்திரம் மிக்கவர்களாகவோ காணப்படவில்லை. இதன் காரணமாக இக்காலப் பகுதியில் தென்னிந்திய ஆட்சியாளர்கள் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றும் நோக்குடன் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றனர்.

தேவநம்பியதிஸ்ஸவின் சகோதரர்களிலொருவனான வரதிஸ்ஸ என்பவனின் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து சேனக, குட்டக என்ற குதிரை வியாபாரிகள் இருவர் படையெடுத்து வந்து வரதிஸ்ஸனைப் புறங்கண்டு அனுராதபுரத்தினைக் கைப்பற்றி 22 வருடங்கள் (கி.மு. 177–55) ஆட்சி செய்ததாக மகாவம்சம் கூறுகின்றது[10]. வெறுமனே குதிரை வியாபாரிகளான இவர்கள், நாட்டினைக் கைப்பற்றி ஆட்சி செய்தமை பற்றி மகாவம்சம் கூறுவதானது வரதிஸ்ஸ பலவீனத்தினையே காட்டுகின்றதெனலாம். ஆனால் இவை பற்றிய செய்திகள் தென்னிந்திய வரலாற்று மூலங்களில் காணப்படவில்லை.

சிலகாலத்திற்குப் பின்பாக தேவநம்பியதிஸ்ஸனின் மற்றொரு சகோதரனின் ஆட்சி அனுராதபுரத்தில் நடைபெற்றது. அசேல என்ற பெயருடைய இவனது ஆட்சிக் காலத்தில் இலங்கைமீது தென்னிந்தியா விலிருந்து மற்றொரு படையெடுப்பு நிகழ்ந்தது[11]. இவனது 10ஆவது ஆட்சியாண்டின் இறுதியில் சோழ பிரபுத்துவக் குடும்பத்தினைச் சேர்ந்த எல்லாளன் அனுராதபுரத்தின் மீது படை எடுப்பினை மேற்கொண்டு அதனைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் நீதி நெறி தவறாத ஆட்சியினை மேற்கொண்டான்[12]. இவனது ஆட்சியினை மனுநீதிச் சோழனது ஆட்சியுடன் ஒப்பிடுகின்றனர். அதே நேரத்தில் தென்னிந்திய வரலாற்று மூலங்கள் எவற்றிலும் இப்படையெடுப்புத் தொடர்பான செய்திகள் காணப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து எல்லாளன் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தவன் இலங்கை மன்னன் துட்டகாமினி ஆவான். பௌத்த காவலனாகச் சித்தரிக்கப்படுகின்ற இம்மன்னன் ஏறத்தாழ 24 ஆண்டுகள் (கி.மு. 161–137) அனுராதபுரத்தினை ஆட்சிசெய்திருந்தான்[13]. எல்லாளன் ஒரு தமிழ் மன்னனாக மகாவம்சத்திலும் ஏனைய இலக்கியங்களிலும் சித்தரிக்கப்பட்ட போதும் அவன் இறந்ததும் அரசனுக்குரிய மரியாதை அனைத்தையும் துட்டகாமினி செய்யத்தவறவில்லை. அவன் நினைவாக நினைவுஸ்தூபி ஒன்றினைக் கட்டி அப்பகுதிக்குச் சென்று வருபவர்கள் அவ்விடத்தில் அமைதியைக் கடைப்பிடிக்கவும், அதனை வழிபடவும் ஏற்பாடுகள் செய்திருந்தான்[14].

இலங்கையின் வரலாற்றினைக்கூற எழுந்த பாலி இலக்கியங்கள் எல்லாளன்–துட்டகாமினி போராட்டத்தினை ஒரு இனப்போராட்ட மாகக் காட்டுகின்றன. ஆனால் உண்மையில் இருவருக்குமிடையில் நடைபெற்ற இப்போராட்டம் இனப்போராட்டமல்ல எனவும், அது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றத் தோன்றிய அரசியல் ஆதிக்கப்போர் எனவும் அறியமுடிகின்றது. இதற்காகப் பல காரணங்களை நாம் உதாரணமாக எடுத்துக்காட்டலாம். இப்போர் இனப்போராக இருந்திருந்தால் இரு பக்கங்களிலும் சிங்களத்–தமிழ் படைகள் இருந்திருக்க முடியாது. அதேநேரம் தோல்வியடைந்த தமிழ்மன்னனுக்குத் துட்டகாமினி மரியாதை செலுத்தியிருக்க அவசியமில்லை. போரின் முடிவில் தமிழர்கள் துன்புறுத்தப்பட்டதற்கோ அல்லது வெளியேற்றப்பட்டதற்கோ ஆதாரங்கள்

எவையும் கிடைக்கவில்லை. இவை எல்லாவற்றினையும்விட இனவாதம் என்பது அக்காலத்தில் காணப்பட்டிருந்தால் ஒரு மன்னன் நீதிநெறி தவறாமல் 44 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்க முடியாது.

எல்லாளனின் மரணத்திற்குப் பின்பு தென்னிந்தியாவிலிருந்து அவன் மருமகன் பல்லுக்க, 60,000 பேர் கொண்ட படையுடன் அனுராதபுரம் நோக்கி முன்னேறியபோது இப்படைகளை புஸதேவ என்ற துட்டகாமினி யின் அதிகாரி முறியடித்தான்[15]. இப்படையெடுப்பு எல்லாளன் காலத்திலும் சரி, அவன் இறந்ததன் பின்பாகவும் சரி இரண்டு நாடுகளுக்குமிடையிலான அரசியல் தொடர்புகள் தொடர்ந்தமையினை எடுத்துக்காட்டுகின்றது.

மற்றுமொரு தென்னிந்திய அரசியல் தொடர்பு மன்னன் வட்டகாமினி (வலகம்பாகு) காலத்தில் (கி.மு.103) ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வந்து 7 பாண்டியர்கள் இலங்கைமீது தாக்குதல் தொடுத்தனர். தொடர்ந்து வலகம்பாகுவினைத் தோற்கடித்த அவர்கள் அனுராதபுரத்தினைக் கைப்பற்றினர்[16]. இத்தாக்குதல்களை முறியடிக்க வலகம்பாகு தனக்கு எதிராக உரோகணவிலிருந்து கிளர்ச்சிகள் செய்து வந்த தீய என்ற பிராமணனைப் பாண்டியர்களுக்கு எதிராகப் போராடுமாறு தூண்டினான். எவ்வாறாயினும் பாண்டியர்களால் வலகம்பாகு தோற்கடிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அனுராதபுரத்தினைக் கைப்பற்றிக்கொண்ட 7 பாண்டியர்களில் இருவர் தென்னிந்தியாவுக்கு உடனே திரும்பி விட்டார்கள். அவர்களில் ஒருவன் வட்டகாமினியின் மனைவியுடனும், மற்றவன் புத்தரின் புனிதபாத்திரத் துடனும் (Bowl relic) திரும்பிச் சென்றனர்[17]. ஏனைய புலகத்த, பாகிய, பனயமாற, பிளையமாற, தாதிக என்பவர்கள் 14 ஆண்டுகள் அனுராதபுரத்தினைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். அவர்களது 14ஆவது ஆட்சியாண்டின் இறுதியில் வலகம்பாகு மன்னன் இறுதியாக ஆட்சி செலுத்திய தமிழ் அரசனைத் தோற்கடித்து அனுராதபுரத்தினைத் திரும்பவும் மீட்டுக் கொண்டான்[18].

பொதுவாகவே கிறிஸ்துவிற்கு முன்பு இலங்கைமீது தென்னிந்தியா விலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடம்பெயர்வுகள் காரணமாக இலங்கையின் சனத்தொகையில் அதிகரித்த மாற்றங்கள் ஏற்பட்டன. வடபகுதித் தமிழர்களின் எண்ணிக்கையிலும்கூட அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. குறிப்பாக விஜயனுக்குப் பின்பாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த குழுக்கள் அனைத்தினதும் வருகையினை நாம் பொதுவாகக் குடியேற்றம் எனலாம்.

**கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலப்பகுதி**

கிறிஸ்துவுக்குப் பின்பாக, இலங்கை தென்னிந்திய அரசியல் உறவில் புதியதொரு போக்கு காணப்பட்டது. இதுவரை காலமும் தமது ஆட்சியைப் பாதுகாக்கும் பொருட்டுத் தென்னிந்திய அரசுகளின் உதவியை இலங்கை மன்னர்கள் நாடியமைக்கான சான்றுகள் எவையும்

கிடைக்கவில்லை. ஆனால் இக்காலத்திலிருந்து இலங்கையில் ஆட்சியுரிமையை இழந்த அரசர்கள் பலரும் தென்னிந்தியா சென்று அங்கு ஆட்சியில் இருக்கும் அரசரின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டு மீண்டும் வந்து ஆட்சி அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்கின்றதொரு நிலை காணப்பட்டது.

கி.பி. 30 இல் இலம்பகர்ணனால் சிறையிலடைக்கப்பட்ட இளநாக சிறையிலிருந்து தப்பிச்சென்று தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தான். அதன்பின்பு 3 ஆண்டுகள் கடந்தபின் இளநாக தமிழ்நாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியினைக் கைப்பற்றிப் பல ஆண்டுகள் (கி.மு. 33–43) ஆட்சி செய்தான்[19].

வங்கநாஸிகதிஸ்ஸ மன்னன் காலத்தில் (கி.மு. 111–114), தென்னிந்தியப் படையெடுப்பொன்று இலங்கைமீது மேற்கொள்ளப்பட்டது. கரிகாற்சோழ மன்னன் இலங்கைமீது படையெடுப்பொன்றினை மேற்கொண்டு 12,000 பேரினைக் கைதிகளாகப் பிடித்துச்சென்று காவேரிக்கு அணை கட்டியதாக இராஜாவலிய என்ற இலங்கை வரலாற்று நூல் கூறுகின்றது[20]. தொடர்ந்து இதற்குப் பழிவாங்கும் முகமாக இவனது மகன் கஜபாகு இலங்கையிலிருந்து படையெடுத்துச் சென்று கைப்பற்றிக்கொண்டு செல்லப்பட்ட 12,000 பேருடன் மேலும் 12,000 பேரைக் கைப்பற்றிக் கொண்டு இலங்கை வந்ததாக மேலும் அந்நூல் குறிப்பிடுகின்றது[21]. ஆனால் மகாவம்சத்திலோ அல்லது சங்க இலக்கியங்களிலோ இப்படையெடுப்புத் தொடர்பான குறிப்புக்கள் எவையும் இல்லை.

ஆனால் சிலப்பதிகாரத்தில், இலங்கை மன்னன் 1ஆம் கஜபாகு (கி.பி. 114 – 36) சேரன் செங்குட்டுவன் கண்ணகி சிலைக்கு விழாவெடுத்த சமயத்தில் அங்கிருந்ததாகக் குறிப்பொன்று காணப்படுகின்றது[22]. எனவே ஏதோ ஒரு வகையில் இவற்றில் காணப்பட்ட குறிப்புகள் இரண்டு நாடுகளுக்கிடையிலும் காணப்பட்ட அக்காலத்திய தொடர்பினைப் பிரதிபலிக்கின்றது. இதே நேரத்தில் இலங்கை மன்னன் கஜபாகுவும், தமிழகமன்னன் செங்குட்டுவனும் சமகாலத்தவராக இருப்பதில் சந்தேகங்கள் இருப்பதாகவும் சிலர் கருதுகின்றனர்[23].

**கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னரான காலப்பகுதி**

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு இலங்கையின் அரசியல் வரலாற்றில் மாற்றங்கள் பல நிகழ்ந்தன. அதாவது வாரிசு உரிமைப் போராட்டங்கள் பல இக்காலத்தின் பின்பாக இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்டன. ஆட்சியுரிமையைப் பெற்றுக்கொள்கின்ற நோக்குடன் தந்தை, தாய், சகோதரன், மாமன் முறைகள் பாராமல் கொலைகள் இடம்பெற்றன. இதே காலத்தில் தென்னிந்திய அரசியலிலும் மாற்றங்கள் பல இடம்பெற்றன. தென்னிந்தியாவில் மூவேந்தர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் களப்பிரர்களின் ஆட்சி உதயமாகியது. பௌத்த சமண மதங்கள் அங்கே எழுச்சி கண்டன[24]. இந்து மதம்

வீழ்ச்சி நிலையினை எதிர்கொண்டது. தமிழகத்தில் ஏற்பட்ட களப்பிரர்கள் ஆட்சியினை வரலாற்றாசிரியர்கள் பலரும் இருண்டகாலம் என்கின்றனர். இத்தகையதொரு இருண்ட காலத்திலும்கூட இலங்கை தென்னிந்திய உறவுகள் தொடர்ந்தன. அபயநாக (கி.பி. 231–40) என்ற இலங்கை மன்னன் களப்பிரர்களின் உதவியினைப் பெற்று, படைதிரட்டி வந்து 9 வருடங்கள் இலங்கையை ஆட்சிசெய்தான்[25].

தாதுசேனன் ஆட்சிக்கு வருவதற்குச் சற்று முன்பதாகப் பண்டு பாரிந்த, குட்டபாரிந்த, திரிதர, தாதிய, பிளைய போன்ற 5 ஆக்கிரமிப் பாளர்களின் தாக்குதல்கள் இலங்கைமீது நடைபெற்றது. இவர்கள் அனுராதபுரத்தினைக் கைப்பற்றி ஏறத்தாழ 24 ஆண்டுகள் (கி.பி. 429–55) வரை ஆட்சிசெய்தனர்[26]. இப்படையெடுப்புக்குப் பண்டு என்பவன் தலைமை தாங்கியதன் காரணமாக இவர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது.

தாதுசேனன் (கி.பி. 455 – 73) ஆட்சிக்காலத்தின் பின்னர் அவனது புதல்வர்களான முதலாம் கஜபாகு, மொகல்லன்ன ஆகியோருக்கு இடையிலே முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனால் கஜபாகு தனது சகோதரன் மொகல்லன்னவைச் சிறையிலடைத்தான். சிறையிலிருந்து தப்பிய மொகல்லன்ன தென்னிந்தியா தப்பிச்சென்று தமிழ்ப்படை ஒன்றின் உதவியுடன் திரும்பிவந்து முதலாம் கஜபாகுவைத் தோற்கடித்து மீண்டும் அனுராதபுரத்துக்கு அரசனாகினான்[27]. தொடர்ந்து இவனது ஆட்சி 18 ஆண்டுகள்வரை (கி.பி. 491–508) நீடித்தது. மேலும் இக்காலப் பகுதியில் தமிழகத்தில் களப்பிரர்களின் ஆட்சியே காணப்பட்டிருந்ததால் இம்மன்னன் அவர்களின் ஆதரவினைப் பெற்றே இலங்கையில் அரசனாகியிருக்க வேண்டும்.

**பல்லவர் காலம்**

தொடர்ந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய அரசியல் வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதுவரை இருந்துவந்த இருண்ட காலத்துக்கு முடிவு ஏற்பட்டது. அந்த வகையில் சங்ககாலத்தின் பின்பாக உறங்கிக்கொண்டிருந்த தமிழகம் பல்லவ வம்சத்தின் எழுச்சியுடன் பல மாற்றங்களை அனுபவித்தது[28]. தமிழக அரசியலில் ஒரு உறுதித்தன்மையொன்று காணப்பட்டது. இத்தகைய மாற்றங்ககள் தென்னிந்தியாவில் ஏற்பட்டுக்கொண்டிருந்த அதேநேரத்தில் இலங்கையின் அரசியலில் உறுதியற்ற தன்மையொன்று காணப்பட்டது. ஆட்சியினை நிலைநாட்ட விரும்பியவர்கள் தென்னிந்தியா சென்று அங்கு ஆட்சியிலிருக்கும் அரசுகளின் உதவியினைப் பெற்று இலங்கையில் ஆட்சியமைப்பது வழக்கமானதாகக் காணப்பட்டது. எனவே இலங்கையின் அரசியலில் இக்காலப்பகுதியில் தென்னிந்தியப் படைகளின் செல்வாக்குத் தவிர்க்க முடியாததொன்றாகியது[29].

காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு பல்லவ வம்சம் சிம்மவிஷ்ணு வின் காலத்திலிருந்து (கி.பி. 575–600) எழுச்சியடைய ஆரம்பித்தது.

களப்பிரர்களின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. சமகாலத்தில் தெற்கே பாண்டியவம்சம், பாண்டிய–சேர அரசுகளினை இணைத்துக் கொண்டு கடுங்கோன் பாண்டியன் தலைமையில் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அத்தகைய மாற்றங்களின் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது.

அரசியலில் புதிய கொள்கை பின்பற்றப்பட்டது. தென்னிந்திய அரசர்களின் ஆதரவினை இலங்கை அரசர்கள் பெற்றுக்கொண்ட அதேநேரத்தில், தென்னிந்தியாவில் எந்த அரசு எழுச்சியடைகின்றதோ அந்த அரசவம்சத்துக்கு எதிராகப் போராடுகின்ற கொள்கையினை இலங்கை அரசர்கள் பின்பற்றத் தொடங்கினர். இதன் காரணமாகப் பாதகமான விளைவுகளையும் இலங்கை அரசர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதாவது தென்னிந்தியாவில் எழுச்சியடைகின்ற வம்சங்கள் இலங்கைமீது படையெடுக்க அது காரணமாகியது. இதன் காரணமாகவோ அல்லது பிற காரணங்களினாலோ பல்லவ ஆட்சிக்காலத்தின் பின்பாகத் தமிழர்களின் வருகை இலங்கையில் அதிகரித்துச் சென்றது. இவ்வாறு இலங்கை வந்த மக்கள், சமகாலத்தில் தென் இந்தியாவில் பரவியிருந்த பக்தி இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகக் காணப்பட்டனர். ஆகவே அவர்கள் சிங்கள கலாச்சாரத்துடன் இணையாமல் தனிப்பட்ட மக்கள் கூட்டமாக வாழ்வதற்கு முற்பட்டனர்[30].

சீலமேகவண்ணவின் (கி.பி. 619–28) காலத்தில் அவனுடைய படைத்தளபதியாக இருந்த சிறிநாக என்பவன் தமிழகம் சென்று தமிழ்ப்படையொன்றின் ஆதரவினைப் பெற்று இலங்கையைக் கைப்பற்றும் நோக்குடன் வந்து தோல்வி கண்டான்[31]. சீலமேகவண்ணவின் மகன் மூன்றாம் அக்கபோதி என்பவன், இரண்டாம் ஜெட்டதிஸ்ஸனால் தோற்கடிக்கப்பட்ட போது மூன்றாம் அக்கபோதி தென்னிந்தியாவுக்குச் சென்று படையுதவி பெற்றுவந்து மீண்டும் அனுராதபுரத்தினைக் கைப்பற்றினான்[32]. இவ்வாறு உதவி கேட்கின்ற படலம் மேலும் தொடர்ந்தது. ஜெட்டதிஸ்ஸ இறந்த சமயத்தில் அவன் அமைச்சன் திட்டதிஸ்ஸ தென்னிந்தியா சென்று உதவி பெற்று மூன்றாம் அக்கபோதியை வென்று முதலாம் தத்தோபதிஸ்ஸ என்ற பெயருடன் அனுராதபுரத்தின் மன்னனானான்[33].

இதனைத் தொடர்ந்து மூன்றாம் அக்கபோதி தமிழ்நாடு சென்றான். இந்நிலையில் இவனது மகன் இரண்டாம் கஜபாகு முதலாம் தத்தோபதிஸ்ஸவை வெற்றிகொண்டு அரியணை ஏறினான். இதனால் தோற்ற அரசன் தமிழ்நாடு சென்றான். இக்கட்டத்தில் இலங்கை மன்னனாக இருந்த கஜபாகு இறந்த சந்தர்ப்பத்தில் (கி.பி. 659) முதலாம் தப்புலவ அனுராதபுரத்தில் அரசனானான். இதே நேரத்தில் தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்திருந்த ஹத்தாதட்ட மீண்டும் வந்து அனுராதபுரத்தினைக் கைப்பற்றிக்கொண்டான்[34]. இவ்வாறாக இலங்கை – தென்னிந்திய அரசியல் தொடர்பு பல்லவர்கள் காலத்தில் அதிகரித்து

வந்தது குறிப்பிடத்தக்கது. இத்தகைய படை உதவிக்காக அழைத்து வரப்பட்ட தமிழ்வீரர்களில் பெரும்பாலானவர்கள் அனுராதபுரத்தில் தங்கினர். இவ்வாறு வந்தவர்கள் பெருவாரியாகத் தங்கிவிட்டதன் காரணத்தினால் அனுராதபுரத்தில் தமிழரின் ஆதிக்கம் அதிகரித்தது. இதனால் பின்னாளில் அனுராதபுரத்தில் அரசாண்ட சிங்கள மன்னர்கள் அவர்களுக்கு அஞ்ச வேண்டியதாயிற்று[35].

பல்லவமன்னர்களில் ஒருவரான நரசிம்மவர்மன் காலத்திலிருந்து பல்லவர்கள் இலங்கையுடன் தொடர்புகளை விரிவாக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மானவர்மன் என்ற இலங்கை மன்னன் தனது மனைவியுடன் இம்மன்னனின் உதவி கேட்டு அரசியல் தஞ்சமடைந் திருந்தான். நரசிம்மவர்மனும் மானவர்மனை அன்புடன் வரவேற்று அடைக்கலமும் கொடுத்திருந்தான்[36]. மானா என்று அழைக்கப்பட்ட இம்மன்னன் மானவர்மன் எனப் பல்லவர்கள் போல் தனது பெயரினையும் மாற்றிக்கொண்டான். இருவரும் நண்பர்களானார்கள். அந்தநேரத்தில் சாளுக்கியருடன் போர் செய்ய வேண்டியிருந்தமையால் உடனடியாக நரசிம்மவர்மனால் இலங்கை மன்னனுக்கு உதவிபுரிய முடியவில்லை. எனினும் கி.பி. 642இல் பல்லவர்களின் உதவியைப் பெற்றுக்கொண்ட இலங்கை மன்னன் மீளவும் அனுராதபுரத்தினைக் கைப்பற்றி அரசாட்சி செய்தான்.

### பாண்டியர் காலம்

பல்லவர்களைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் பாண்டியவம்சம் எழுச்சியடைந்தது. இது முதலாவது பாண்டியப்பேரரசு எனப்படுகின்றது. பல்லவர் காலத்தில் காணப்பட்டதனைவிட இப்பாண்டியர்களின் காலத்தில்தான் இரண்டு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் அதிகரித்தன. காரணம் சிங்கள மன்னர்கள் மத்தியில் விஜயன் கதையில் பாண்டியவம்சம் தொடர்புப்படுத்தப்படுவதால் நீண்டகாலமாகவே அவர்கள் தமக்குச் சார்பானதொரு வம்சமென்ற கருத்து சிங்கள மன்னர்களிடம் நிலவி வந்தது[37].

பாண்டிய மன்னர்களிலொருவரான சிறிமாறசிறிவல்லபன் (கி.பி. 830–62) காலத்தில் கி.பி. 848இல் இலங்கைமீது தென்னிந்தியாவிலிருந்து படையெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. இப்படையெடுப்புப்பற்றிய செய்திகளைச் சின்னமனூர் செப்பேடு கூறுகின்றது[38]. இப்படையெடுப்பின் போது முதலாம் சேன (கி.பி. 833 – 53) மன்னனின் ஆட்சி அக்காலத்தில் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சேன மன்னன் தோற்கடிக்கப்பட்டுப் பாண்டிய மன்னனின் மேலாணையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. பௌத்த விகாரைகள் அழிக்கப்பட்டு, அவற்றின் செல்வங்கள் பாண்டியர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

இரண்டாம் சேன காலத்தில் (853–87) பாண்டியநாட்டில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. இத்தகையதொரு நெருக்கடியான நிலையில், இரண்டாம் வரகுணவர்மன் என்ற பாண்டிய மன்னன் இலங்கை

மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். தொடர்ந்து இலங்கை மன்னனின் உதவியினைப் பெற்றுக்கொண்ட பாண்டிய மன்னன் இறுதியில் தன்னுடைய அரியணையினை பெற்றுக்கொண்டான்[39].

இரண்டாம் இராஜசிம்மன் (கி.பி. 900–20) காலத்தில் பாண்டியர்களின் செல்வாக்கு மீண்டுமொரு முறை இலங்கையில் ஏற்பட்டது. சோழர்கள், பாண்டியப் பேரரசினைத் தாக்கி மதுரையைக் கைப்பற்றிக் கொண்டபோது உதவிக்குச் சென்ற ஐந்தாம் கஜபாகுவின் (914–923) படைகள் வேலூர் என்ற இடத்தில் பராந்தகனின் சோழப்படைகளால் தோற்கடிக்கப்பட்டன[40]. போரில் தோற்கடிக்கப்பட்ட இராஜசிம்மன் தன்னுடைய முடியினையும் ஆபரணங்களையும் இலங்கையில் அடைக்கலமாகக் கொடுத்துவிட்டுக் கேரளத்திற்குத் தப்பிச் சென்றுவிட்டான்[41].

**சோழர் காலம்**

பாண்டியப்பேரரசின் மறைவினைத் தொடர்ந்து, சோழப்பேரரசு தென்னிந்தியாவில் மட்டுமன்றிக் கடல்கடந்த நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றுப் பேரரசாக மாறிவந்தது. இவர்கள் பிற்காலச் சோழர்கள் எனப்படுகின்றனர். பிற்காலச் சோழப்பேரரசுக்கு அடிகோலியவர் விஜயாலய சோழன் (கி.பி. 850–881)[42]. அவரைத் தொடர்ந்து ஆதித்தியச் சோழன் (881–907) காலத்தில் இப்பேரரசு மேலும் வளர்ச்சி கண்டது[43]. தஞ்சையினைத் தலைநகரமாகக் கொண்டு இப்பேரரசு வளர்ச்சி கண்டது. அத்துடன் சோழப்பேரரசு வளர்ச்சிகண்ட சமயத்தில் சிங்களமன்னர்கள் பலரும் நீண்டகாலமாகவே பாண்டியருக்கு ஆதரவான கொள்கையையும், சோழருக்கு எதிரான கொள்கைகையும் பின்பற்றி வந்தமையின் காரணமாக இலங்கையைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர சோழர்கள் முற்பட்டனர். இவர்களின் படையெடுப்புக்கள் தனியே அரசியல்ரீதியில் மட்டுமன்றி, பொருளாதார சமூகப் பண்பாட்டு அடிப்படையிலும் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. சோழர்களின் ஆக்கிரமிப்புக்களால் இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை அவதானிக்கத்தக்கது[44].

ஏற்கனவே பாண்டிய மன்னனால் இலங்கையில் ஒப்படைக்கப்பட்ட முடி மற்றும் ஆபரணங்களைத் திருப்பித் தருமாறு அப்போதைய இலங்கை மன்னன் நான்காம் உதயாவிடம் (946–54) சோழர்கள் தூது அனுப்பினர். இதற்கு இலங்கை மன்னன் மறுப்புத் தெரிவித்தமையின் காரணமாகப் பராந்தகன் கி.பி. 949இல் இலங்கைமீது படையெடுப்பினை மேற்கொண்டான். தொடர்ந்து அனுராதபுரம் அவனால் கைப்பற்றப்பட்டது[45]. எனினும் இவன் என்ன நோக்கத்துக்காக இலங்கைமீது படை எடுத்தானோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. சுந்தர சோழ பராந்தகன் காலத்தில் (கி.பி. 957–73) சோழருக்கும், பாண்டியருக்கும் இடையிலே நடைபெற்ற போராட்டத்தின் போது பாண்டியர்களின் சார்பாக நான்காம் மகிந்த (956–76) படை அனுப்பியிருந்தான்[46] என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சோழப் பேரரசன் இராஜராஜன் (கி.பி. 985–1014) காலத்தில் சோழப்

பேரரசு நிர்வாகம், நீர்ப்பாசனம், கட்டடம் எனப் பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டிருந்தது. மேலும் இக்காலகட்டத்தில் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்த (கி.பி. 982–93) சோழருக்கு எதிரான கொள்கையினைக் கடைப்பிடித்து வந்தமையினால், இலங்கை மீண்டும் 993 இல் சோழரால் ஆக்கிரமிக்கப்பட்டது[48]. கி.பி. 1017 அளவில் இராஜராஜன் மகன் இராஜேந்திர சோழனின் காலத்தில் (1012 –1044) பராந்தகனால் நிறைவேற்ற முடியாத நோக்கம் இலங்கையில் இராஜேந்திரனால் நிறைவேற்றப்பட்டது. அதாவது இலங்கையில் இராஜசிம்மனால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த முடி மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றினை இராஜேந்திர சோழன் கைப்பற்றிக் கெண்டான்[49]. சோழரின் காலத்தில் இலங்கையின் தலைநகரம் அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாற்றப்பட்டு, ஜனநாதமங்கலம் என்ற சோழ மன்னரின் விருதுப்பெயரால் புதிய தலைநகரம் அழைக்கப்பட்டது. சோழப்பேரரசுடன் இணைக்கப்பட்ட இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரினையும் பெற்றுக்கொண்டது[50].

பொதுவாகத் தென்னிந்திய–இலங்கை அரசியல் உறவானது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட உறவாக நீடித்தது சோழர்களின் ஆட்சிக்காலத்தில் வலுவடைந்து பின்வந்தவர் களால் கைவிட முடியாத அளவிற்கு வளர்ந்தது. இந்த நீண்ட கால அரசியல் உறவின் முக்கிய வெளிப்பாடுகளிலொன்றாக இலங்கையில் தமிழ் இன மக்கட்தொகையும் செல்வாக்கும் உயர்ந்ததென்பது மறுக்க முடியாதவிடயமாகும்.

**ஆதாரம்:**


1. தனபாக்கியம் குணபாலசிங்கம், இலங்கையில் தொல்லியல் ஆய்வுமுறைகளும் திராவிட கலாசாரமும், சென்னை, 2001, ப.24.
2. W. Geiger,(ed& tr), *Mahavamsa*, Colombo, 1960.
3. B.C. Law, (tr) *Dipavamsa, The Historical Journal*, Vol. VII, 1939.
4. Wilson Jeyaratnam, *Politics in Sri Lanka*, (1747-1979), London, 1974, p-02.
5. W. Geiger (ed) *Mahavamsa,* Colombo, 1960, Ch-VII, VV. 50-58.
6. F.R. Allchin and R.A. C. Coningham, “The Rise of Cities in Sri Lanka”, *The Archaeology of Early Historic South Asia - The Emergence of Cities and States,* U.K., 1995. pp.157-158.
7. Geiger, *Mahavamsa*
8. K.M.DE. Silva, *A History of Sri Lanka,* Delhi, 1981.
9. வி.கே. நடராசா, பண்டைய ஈழம், தொகுதி 01, 2973, பப. 58–59.
10. Geiger, *Mahavamsa,*ChXXI, VV. 10-11.
11. K.M.D.E. Silva, *Op.cit.*, p.12.
12. Seneviratne Brian, "The Problems of SriLanka", *South Asia in Transitional Conflicts and Tension*, (Ed. Kalim Bahadur) New Delhi, 1986, pp. 233-236.
13. L.E. Blaze, *The History of Lanka*, New Delhi-Madras, 1995, p.35.
14. K.A.Nilakanta Sastri, *The Colas*, Madras, 1975, pp.24-25.
15. Geiger, *Mahavamsa*, Ch XXV, VV. 77-78.
16. Ibid., Ch XXXIII, V. 42.

17. Pushparatnam, Paramu., "The Impact of South Indian Art on Sri Lankan Sculpture (Anuradhapura Period)", Dissertation Submitted to the University of Jaffna, 1998, for Master of Philosophy in History,p.15.
18. L.E. Blaze, *Op.cit.*, p.41.
19. வி. கே. நடராசா, *மு.கூ.நூ, ப.87.*
20. Gunasekara B. Vasalamudalli, (eds), *Rajavali*, Colombo, 1953,p.54.
21. Ibid.
22. உ. வே. சாமிநாதஐயர், *சிலப்பதிகாரம் 30:160–164, சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியாரக்கு நல்உரையும்*, சென்னை, *2001, ப.585.*
23. வி. பி. புருசோத்தம், *சங்ககால மன்னர்கள்*, சென்னை, *1989, ப.71.*
24. எஸ். கோமதிநாயகம், *தென்னிந்தியவரலாறு*, சென்னை, *2003, ப.58.*
25. Geiger, *Mahavamsa*, ChXXI, VV 42-50.
26. கே.கே.பிள்ளை, *தென்னிந்தியவரலாறு*, மெட்ராஸ், *1975, பப. 49–50.*
27. K.M. De Silva., *Op.cit.*, pp.19-20.
28. ப. புஸ்பரட்ணம், *பூநகரி தொல்பொருளாய்வு*, யாழ்ப்பாணம், *1993, ப.52.*
29. எஸ்.கே. சிற்றம்பலம், யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு, சென்னை, *1993, ப. 178.*
30. எஸ். பத்மநாதன், *யாழ்ப்பாண இராச்சிய வரலாறு*, கொழும்பு, *1978, ப.03.*
31. W. Geiger(ed), *Culavamsa*, Colombo, 1953, Ch 44, vv. 70-73.
32. மயிலை சீனி வேங்கடசாமி, *மகேந்திரவர்மன்*, சென்னை, *1955, ப.19.*
33. Culavamsa, *Op.cit.*, Ch.44, vv.70-73.
34. மயிலை சீனி வேங்கடசாமி, *வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்*, திருநெல்வேலி, *1957, ப.26.*
35. மயிலை சீனி வேங்கடசாமி, மு.கூ.நூ, “ஐரோப்பியர் வருகை”, *மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள்*, டிசம்பர் *2001, ப.101.*
36. மேலது., *பப.103–104.*
37. கே. கே. பிள்ளை, *மு.கூ.நூ., ப.56.*
38. மேலது., *ப. 56.*
39. மேலது., *ப. 60.*
40. கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, *தென்னிந்தியவரலாறு*, (வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் விஜயநகர வீழ்ச்சிவரை), மெட்ராஸ், *1976, ப.176.*
41. மேலது.
42. J. Srinivasan, “The Position of Jainism and Buddhism in the Period of the later Cholas”, *South Indian History Congress Proceedings, 27th Annual Session*, 2007, p.599.
43. K.A. Nilakantasastri, *The Pandyan Kingdom*, London, 1929, p.21.
44. எஸ்.கே. சிற்றம்பலம், “ஈழமும் இந்துமதமும் அனுராதபுரக்காலம்” *சிந்தனை* தொகுதி *01*, இதழ் *01* மார்ச் *1984, ப. 109.*
45. S. Paranavitana (ed) *History of Ceylon*, Vol. I, pt I Colombo, 1959, p.347.
46. Ibid.
47. Rajayyan, *History of Madurai* (1769 - 1801), Madurai, 1974, p.21.
48. நீலகண்டசாஸ்திரி, *சோழர்கள், மு.கூ.நூ, ப.172.*
49. மேலது, *ப.199.*
50. கே. பகவதி, *தமிழ்நாடு இலங்கை ஊர் பெயர்கள் ஒப்பாய்வு*, சென்னை, மார்ச் *1991, ப.74.*